# 05-05-2024 செய்தி

## துருக்கியின் வர்த்தகத் தடை : இஸ்ரேல் பதில் நடவடிக்கை

- தங்களுடனான வர்த்தக உறவை துருக்கி நிறுத்தி வைத்துள்ளதற்கு பதிலடி நடவடிக்கைகளை இஸ்ரேல் அறிவித்துள்ளது.
- இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- துருக்கியின் வர்த்தகத் தடை குறித்து வெளியுறவுத் துறை அமைச்சகம், வர்த்தகத் துறை அமைச்சகத்தின் அதிகாரிகளும் வரி விதிப்புத் துறை அதிகாரிகளும் ஆலோசனை நடத்தினர்.
- அப்போது, துருக்கியின் நடவடிக்கைக்கு பதிலடியாக அந்த நாட்டுடனும் காசா மற்றும் மேற்குக் கரைப் பகுதியுடனும் வர்த்தகத் தொடர்பை குறைத்துக் கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- காசா போரில் ஆரம்பம் முதலே இஸ்ரேலை புதிதாக கண்டித்து வருகிறது. காசாவில் இஸ்ரேல் போர்க் குற்றத்தில் ஈடுபடுவதாக குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள தென் ஆப்பிரிக்காவுடன் தாங்களும் இணையவிருப்பதாக துருக்கி இந்த வாரம் அறிவித்தது.
- அதுமட்டுமின்றி, காசாவில் வான்வழியாக நிவாரணப் பொருள்களை பாராசூட் மூலம் விநியோகிக்க தங்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இஸ்ரேலுடன் இரும்பு உருக்கு, வாகனங்கள், பிளாஸ்டிக் பொருள்கள், மின் சாதனங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றின் வர்த்தகத்தை துருக்கி கடந்த மாதம் நிறுத்தி வைத்தது.
- இந்த நிலையில், காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படும் வரை இஸ்ரேலுடனான அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் நிறுத்திவைப்பதாக துருக்கி வெள்ளிக்கிழமை அறிவித்தது.
- காசா போர் விவகாரத்தில் இஸ்ரேலுக்கு எதிராக துருக்கி எடுத்துள்ள நடவடிக்கைகளில் இந்த வர்த்தகத் தடை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## யுனிசெஃப் இந்தியா தூதராக நடிகை கரீனா கபூர் நியமனம்

- தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த இளம் விஞ்ஞானி வினிஷா உமா சங்கர், மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த கௌரன்ஷி ஷர்மா, உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த கார்த்திக் வர்மா, அசாம் பாடகர் நஹித் அஃப்ரின் ஆகிய 4 பேரும் யுனிசெஃப் இந்தியாவின் இளைஞர் தூதர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- கடந்த 2014ஆம் ஆண்டு முதல் யுனிசெஃப் இந்தியாவுடன் இணைந்து குழந்தைகள் நல உரிமைக்காக செயல்பட்டு வரும் நடிகை கரீனா கபூர், ஏற்கனவே யுனிசெஃப் இந்தியாவுக்கான நட்சத்திர தூதராகப் பணியாற்றியுள்ளார்.
- இந்நிலையில், அவரை இந்தியாவின் புதிய தேசிய தூதராக நியமித்து யுனிசெஃப் அறிவித்துள்ளது.
- நடிகை கரீனாவைத் தவிர, முதல் முறையாக நான்கு இளைஞர் தூதர்களையும் யுனிசெஃப் இந்தியா நியமித்துள்ளது.
- இதில், இடம்பெற்றுள்ள வினிஷா உமாசங்கர் சூரிய மின் சக்தியில் இயங்கும் இஸ்திரி பெட்டியைக் கண்டுபிடித்து இங்கிலாந்து இளவரசர் வில்லியமின் தலைமையில் செயல்படும் எர்த்ஷாட் பரிசைப் பெற்றுள்ளார்.